# எங்கள் ஸ்கூட்டர் அண்ணன்!



சின்னஞ்சிறு வயது முதல் சித்திரமாய் என் மனதில்;
மன்னிய உறவெனவாய் மறுவின்றி வாழ்ந்து வரும்,
அண்ணன் தனை நினைக்க அங்கங்கே நிகழ்வு எழும்!
வண்ணமாய் வார்த்த பெயரதுவோ **ஸ்கூட்டர் அண்ணன்.**

சின்னமாய் அவ்வூர்தியதே அந்நாளில் திகழ்ந்ததுவே!
அந்நாளில் உறவென்று அறிந்திருந்த போதும்,
பின்னாளில், **அத்தாத்தை** மகனாக அறிந்த போதும்,
எந்நாளும் அவர் எங்களுக்கு **ஸ்கூட்டர் அண்ணன்!**

எங்கள் வீட்டில் யாவருக்கும் இனிய தம்பியாவார்!
என்றன் சித்தப்பா **சின்னதம்பி**க்கு அருந்தோழராவார்!
மன்றில் ஆடும்  பூக்களென மறுவிலாச் சிரிப்பலைகள்!
முறுவலிக்கும் போது முத்தாப்பாய் கண்கள் சிரிக்கும்!

நடையதுவோ தனியழகாம் யான்கண்டு இரசித்ததுண்டு!
உடையதுவோ என்றும் இயல் நிலையாய் நிறையும்!
விடைதேடும் வினாக்களென ஒவ்வொன்றும் தனிப்பார்வை!
மடைதிறந்த வெள்ளமெனப் பேச்சிருக்கும் ஆங்கதுவும்,

மலைமடுவாய் ஏறி இறங்குதல்போல் சொற்களிடை
அலையலையாய் பிரிப்பதுபோல் என்றும் பேச்சிருக்கும்!
ஆங்கிலக் கதைபடிக்கும் அணியான சிந்தையுண்டு!
தூங்காது, வானொலியை கையமர்த்தி கிரிக்கெட்,



தொடர்நிகழ்வை செவிமடுக்கும் நிலையும் உண்டு!
மடவார் **மனோன்மணி அக்கா**வைக் கைத்தலம் பற்ற,
மணியாக இருபிள்ளை பெற்றார் அண்ணன்!
மறுவின்றி தாய்வழி தாத்தாவின் பெயர் கொண்டு,

மூத்தமகன் **கண்ணன், வைத்தியலிங்க**மாகிடவும்,
மெத்த ஓர் பெருமை கொண்ட தந்தையின் அன்பில்,
இளையவன் **ராஜாவும் இராஜ சுந்தர**ராக பெயர்சூட,
இருவரும் இல்லறம் காண அரும்பெயர்த்திகளுண்டு!

அணியென  அண்ணனுக்கு  தந்தைவழித் தாத்தாவின்,
இனியபெயர்  **சண்முகசுந்தரம்** சூட்ட, **நெல்லையப்பனும்**
ஆகிய தாத்தா **சக்தியின்தாசன்** ஆகி நிறைந்தாரே!
அண்ணனின் அன்னை உறவின் வழிஅன்பு செய்வார்!



தஞ்சையிலும் சிலகாலம் அண்ணன் வாழ்ந்ததுண்டு
தனிநிலையாய் நின்றதுவோ சென்னை வாழ்க்கை!
தனித்தனியாய் நண்பர்களின் நிலைமேவிடக் காணலாம்!
இனிதாக ஒழுங்கிட்ட அண்ணனின் மீசை! அடுத்தவரோ,

இருபுறமும் முறுக்கிவிட்ட நிலையெனவாய் மேவிடவும்,
இனிதான இன்னொருவர் மழுங்கச் சிரைத்திருப்பார்!
இனிதாக **பிரகதீசன்** ஆகிய **சண்முகசுந்தரம்** எனும்
இனிய அண்ணன் நினைவை பகிர்ந்து மகிழ்வேனே!.
நீங்கா நினைவுடன்,

**ஒட்டக்குடி தம்பி,**
**கு.ப. அசோகன்,**
சென்னை—73, 05-08-2025